# சமண சமயத்தில் காணப்படும் சூழலியல் மெய்யியலுக்கு ஆதரவான கருத்துக்கள் - ஒரு நோக்கு

கலாநிதி இரத்தினசபாபதி பிரேம்குமார்
சிரேஷ்ட விரிவுரையாளர், தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
E- Mail: premkumarr@esn.ac.lk

***ஆய்வுச் சுருக்கம்***

*ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன் உருவான துறையாக இருக்கும் சூழலியல் மெய்யியல், மெய்யியலின் ஒரு முக்கிய பகுதியாக விளங்கி வரும் ஒழுக்கவியலுடன் தொடர்புபட்டு காணப்படுகிறது. இயற்கைச்சூழலைப் பாதுகாத்தல் என்ற கருத்து பேண்தகு அபிவிருத்தியில் முக்கிய பங்கினை வகித்து வருவதனை நாம் அறிவோம். சூழலின் முக்கிய கூறுகளான தாவரங்கள், விலங்குகள், இயற்கைப் பொருட்கள் என்பவற்றுக்கு மனிதனால் ஏற்பட்டிருக்கும் விளைவுகளை ஆராய்வதனையும் அதனைத் தடுப்பதையும் நோக்காகக் கொண்டு உருவான துறையாக சூழல் மெய்யியல் காணப்படுகிறது. சூழல் மெய்யியல் அதன் உருவாக்கத்திலும் இயல்பிலும் நேர்க்காட்சிவாத தன்மை கொண்டதாகவும் பகுத்தறிவு தன்மை கொண்டதாகவும் காணப்பட்ட போதிலும் கீழைத்தேச சமய தத்துவங்களில் (இந்திய மற்றும் சீன தத்துவங்கள்) சுற்றுச் சூழல் தொடர்பான அனுபூதி (mystic) மற்றும் பௌதீக அதீத கருத்துக்கள் உண்டு என்பதை ஏற்றுக் கொண்டுள்ளது. ஆயினும் சமண மெய்யியல் கருத்துக்கள் எவ்வகையில் சூழலியல் மெய்யியலுடன் தொடர்புபட்டுள்ளன என்ற விடயம் தெளிவாக ஆராயப்படவில்லை சமண தத்துவம் நேர்க்காட்சிவாத அறிவு முறையுடன் பௌதீக அதீத அறிவு முறையினைக் கொண்டு தனது கருத்துக்களை நிறுவ முற்படுகிறது. சூழலின் முக்கிய கூறுகளான தாவரங்கள், விலங்குகள் மற்றும் இயற்கைப் பொருட்கள் எவ்வாறு சமணத்தில் நோக்கப்படுகின்றன என்பது முக்கிய விடயமாக இங்கு ஆராயப்படுகிறது. இந்த விடயம் சூழல் மெய்யியலுடன் தொடர்புடையது. மேற்குறிப்பிட்ட சமணத்தின் சூழல் மெய்யியல் கருத்துக்களை பகுப்பாய்வு செய்வதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.*

***முதன்மைச் சொற்கள்**: சூழலியல் மெய்யியல், பேண்தகு அபிவிருத்தி, தாவரங்கள், விலங்குகள், நேர்க்காட்சிவாதம்*

## 1. அறிமுகம்

சூழலியல் மெய்யியல் (Environmental Philosophy) என்பது மிகவும் அண்மைக் காலத்தில் உருவான ஒழுக்கவியலின் ஒரு பகுதியாகும். இது மனிதர்கள் மற்றும் மனிதர்கள் அல்லாத விலங்குகள், தாவரங்கள் மற்றும் உயிரற்ற பொருட்கள் என்பவற்றுக்கிடையே காணப்படும் தொடர்பினை ஆராய்வதுடன் மனிதர்களைப் போலவே மனிதர்கள் அல்லாதவை (விலங்குகள், தாவரங்கள் மற்றும் உயிரற்ற பொருட்கள்) நடத்தப்பட வேண்டும். அவற்றுக்கும் மனிதர்களைப்போலவே சம உரிமை உள்ளது என இத்துறை வாதிடுகின்றது. இந்த மெய்யியலின் பிரிவு பிரதான சமயங்கள் மற்றும் தத்துவங்கள் இயற்கை மீதும் சுற்றுச்சூழல் மீதும்

கொண்டிருக்கும் ஆதிக்க கருத்து நிலைகளை விமர்சிப்பதுடன் சில சமயங்களிலும் தத்துவங்களிலும் காணப்படும் சூழலியல் மெய்யியல் சார்ந்த கருத்துக்களை அடையாளம் கண்டு அவற்றை வெளிக் கொண்டு வர முயற்சிக்கின்றது. ஏற்கனவே சூழலியல் மெய்யியலாளர்கள் இந்து, பௌத்த, சீன பாரம்பரியங்களில் சூழலியல் மெய்யியலுக்கு ஆதரவான கருத்துக்கள் இருப்பதாக வாதிடுகின்றனர்.

இத்தகைய பிற்புலத்தில் சமணத்தில் சூழலியல் மெய்யியலுக்கு ஆதரவான கருத்துக்கள் என்ற இந்த கட்டுரை முக்கியத்துவம் பெறுகின்றது. மேலைத்தேசத்தில் சூழலியல் மெய்யியல் கருத்துக்கள் வளர்ச்சி பெற்று காணப்பட்டாலும் இவை பகுத்தறிவு சார்ந்த மற்றும் நேர்க்காட்சி வாத (positivism) அடிப்படையினை கொண்டதாக காணப்படுகிறது. ஆனால் சமண சமய சூழலியல் மெய்யியல் கருத்துக்கள் பகுத்தறிவு மற்றும் பௌதீக அதீத அடிப்படையினைக் கொண்டதாக காணப்படுகிறது. சூழலியல் மெய்யியல் பின்வரும் பிரச்சினைகளுடன் அதிகம் தொடர்புபடுவதாக உள்ளது. அருகிவரும் இயற்கை வளங்கள், மனிதர்களினால் சூழலுக்கு ஏற்படுத்தப்படும் தொடர்ச்சியான பாதகமான விளைவுகள், சூழலை பாதுகாத்தல், சூழலை பழைய நிலைக்கு கொண்டு வருதல் சூழல் தொடர்பாக காணப்படும் பொதுக் கொள்கைகள் பற்றிய தத்துவங்கள் மற்றும் வழக்காறுகள் தொடர்பாக எழுப்பப்படும் ஒழுக்க ரீதியான நடைமுறைசார்ந்த பிரச்சினைகள், மனிதர்கள் எவ்வாறான மதிப்பீடுகளை இயற்கை சூழல் மீதும் நகர மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த சூழல் மீதும் கொண்டுள்ளனர் என்பதனையும் ஆராய்கின்றது. மேலும் சூழல் மற்றும் இயற்கை பற்றிய நோக்கு சூழலை மதிப்பிடுதல் ஒழுக்க ரீதியாக விலங்குகள் மற்றும் தாவரங்களின் நிலைப்பாடு, அழிவின் விளிம்பில் இருக்கும் உயிரினங்கள் பற்றிய பிரச்சினை, இயற்கையின் அழகியல் சார்ந்த மதிப்பீடு, இயற்கையினை உரிய நிலைக்கு கொண்டு வருதல், வருங்கால தலைமுறையினருக்கான சூழல் எனப் பல்வேறு விடயங்கள் சூழலியல் மெய்யியலில் ஆராயப்படுகின்றன. இயற்கைச்சூழல் தன்னளவில் பெறுமதி வாய்ந்ததா? அல்லது கருவி ரீதியிலான பெறுமதியினைக் கொண்டதா? என்ற பிரச்சினை சூழல் மெய்யியலில் முக்கிய பிரச்சினையாக ஆராயப்பட்டு வருகிறது. சமணத்தின் மெய்யியற் சிந்தனைகள் விலங்குகள், தாவரங்கள், ஏனைய உயிரினங்கள் இயற்கை அல்லது உயிரற்ற பொருட்கள் தொடர்பாக எத்தகைய கருத்துக்களை கொண்டுள்ளன என்றும் அவற்றின் மெய்யியல் ரீதியிலான அடிப்படைகள் போன்றவற்றை விமர்சன ரீதியாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சமணர்கள் ஐந்து ஒழுக்க சீலங்களை பேசுகின்றனர். இதனை பஞ்ச மகா விரதங்கள் என அழைக்கின்றனர். இவற்றுள் முதன்மையானதாக அஹிம்சை இருப்பது குறிப்பிடத்தக்கது. அஹிம்சை என்பது உயிர்களுக்கு மனத்தாலும் வாக்கினாலும் உடலினாலும் துன்பம் செய்யாது இருத்தலாகும் ஏனைய நான்கு சீலங்களும் கூட சுற்றுச்சூழலை பாதுகாக்கும் செயன்முறைக்கு பெரிதும் உதவும்

மூலோபாயங்களாக இருப்பதை ஊகித்து உணர முடியும். உண்மை பேசுதல், களவெடுக்காமை, பிறர் மனை நயவாமை மற்றும் பற்றுக் கொள்ளமை என்ற மேற்குறிப்பிட்ட விரதங்களை ஒருவர் பின்பற்றுவாரேயானால் அவர் தனது தேவைகளை குறைத்துக் கொள்வார். சுற்றுச்சூழலைப்பாதுக்காக்கும் மிக முக்கிய மூலோபாயமாக தேவைகளை குறைத்துக் கொள்ளுதல் இருக்கின்றது. நவீன விஞ்ஞான வளர்ச்சியானது மனிதனது தேவைகளை அதிகரித்து விட்டது. அங்கீகரிக்கப்பட்ட உயர்ந்த வாழ்க்கை முறை என்ற எண்ணக்கரு பொருட்களையும் சேவைகளையும் அதிகமாக நுகரும் போக்கினை மனிதர்கள் மத்தியில் உருவாக்கிவிட்டது. இத்தகைய சூழ்நிலை சூழலியல் பாதுகாப்பிற்கு பெறும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. வளர்ந்து வரும் சனத்தொகையின் தேவைகளை சமாளிக்க முடியாமல் பூமி திணறிக் கொண்டிருக்கிறது. பூமியில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனதும் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் தீங்கின் அளவும் அதிகரித்துச் செல்கின்றது. சமணத்தில் மெய்யியல் சிந்தனைகளும் ஆசார ஒழுக்க முறைகளும் சுற்றுச் சூழலை பாதுகாப்பதில் மிகச் சிறந்த மூலஉபாயங்களாக விளங்கி வருவதை நாம் கவனிக்க முடிகின்றது.

இந்திய தத்துவ சிந்தனை மரபில் பகுத்தறிவுத்தன்மையினை வற்புறுத்துகின்ற ஒரு தத்துவ மரபாக சமணம் விளங்கினாலும் கூட அதன் ஒழுக்க முறைமைகள் பௌதீக அதீத அறிவினை அடிப்படையாக கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. துறவிகளும் இல்லறத்தாரும் பல்வேறுவிதமான ஒழுக்க சீலங்களை கடைப்பிடிக்க சமண மதம் வற்புறுத்தி வருகிறது. எல்லா ஒழுக்க சீலங்களும் ஒரே மையத்தினைக் கொண்டதாக காணப்படுகிறது. அதுவே 'அஹிம்சை' என்ற மையமாகும். சமண தத்துவம் கர்மக்கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டுள்ள தத்துவமாக காணப்படுகிறது. இந்த கர்மக்கோட்பாடே சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கு அடிப்படையாக விளங்குகின்றது. நாம் அனுபவிக்கும் இன்பங்கள் துன்பங்கள் மற்றும் எமது பிறவி எல்லாவற்றுக்கும் காரணம் நமது செயல்களே என சமணம் வற்புறுத்துகிறது. இத்தகைய பௌதீக அதீத நம்பிக்கை சுற்றுச்சூழலை காப்பதில் முக்கிய பங்கு வகிப்பது குறிப்பிடத்தக்கது.

## 2. ஆய்வுப் பிரச்சினை

சூழலியல் மெய்யியல் மெய்யியலின் பிரதான பிரிவாக விளங்கும் ஒழுக்கவியலின் பிரயோக பிரிவாக அண்மைக் காலத்தில் தோற்றம் பெற்று முக்கியத்துவம் பெற்று வருகிறது. இது மனிதர்கள் மற்றும் மனிதர்கள் அல்லாத உயிரினங்கள், தாவரங்கள் மற்றும் இயற்கைச் சூழல் என்பவற்றுக்கு இடையே காணப்படும் உறவுகள், இயற்கை சூழல் மற்றும் தாவரங்கள் தொடர்பாக மனிதர்கள் கொண்டிருக்கும் நோக்குகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றை பல்வேறு தளங்களில் இருந்து ஆய்வு செய்யும் துறையாகக் காணப்படுகின்றது. கீழைத்தேச சமயங்களிலும் தத்துவங்களிலும் காணப்படும் சூழலை பாதுகாப்பதற்கு ஆதரவான கருத்துக்களையும் சூழலியல் மெய்யியலாளர்கள் ஆய்வு செய்து வருவது

குறிப்பிடத்தக்கது. விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பமுறைகளையும் உள்ளடக்கிய நேர்க்காட்சி வாத கட்டளைப்படிமம் ஆதிக்கம் செய்யும் தற்கால சமூகத்தில் மனிதர்களையும் ஏனைய உயிரினங்களையும் வாழ வைக்கும் இயற்கைச் சூழலுக்கு என்றுமில்லாதவாறு மிகப்பெரிய அச்சுறுத்தல் விஞ்ஞான வளர்ச்சியினாலும் தொழில்நுட்ப முறைகளினாலும் ஏற்பட்டுள்ளது. மீள் உயிர்ப்பு செய்வதற்கு கடினமான பூமியின் இயற்கைச் சுற்றுச்சூழல் அழிக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் வருகின்றது. பூமியின் சனத்தொகை மிக வேகமாக அதிகரித்துக் கொண்டு செல்லும் அதேவேளை மனிதர்களினதும் ஏனைய உயிர்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் இயற்கை வளங்கள் குறைந்து கொண்டே செல்கின்றன. விஞ்ஞானமும் தொழில்நுட்பமுறைகளும் இயற்கையினை ஒரு போகப்பொருளாக நோக்கும் மனப்பான்மையினை ஊக்குவிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகிறது. இந்நிலை தொடருமானால் பூமியானது இன்னும் சிறிது காலத்தில் நரகமாக மாறிவிடும் என்பது பல்வேறுபட்ட ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது. இத்தகைய சூழ்நிலையில் மனித ஆதிக்க நோக்கினை குறைக்க வேண்டும், மனிதர்கள் மற்றும் மனிதர்கள் அல்லாத உயிரினங்கள் மற்றும் இயற்கைச்சூழல் என்பவற்றை நோக்குகின்ற நோக்கு மாறவேண்டும் என்ற குறிக்கோள்களைக் கொண்ட சூழலியல் மெய்யியல் முக்கியத்துவம் பெறுகின்றது. இத்தகைய பிற்புலத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உருவான சமண சமயத்திலுள்ள சூழலியல் மெய்யியலுக்கு ஆதரவான கருத்துக்கள் யாவை?, அவற்றின் மெய்யியல் பிற்புலம் என்ன? என்பன ஆய்வுக்குரிய விடயங்களாகக் காணப்படுகின்றன. சமண சமயத்தில் உள்ள சூழலியல் மெய்யியலுக்கு ஆதரவான கருத்துக்களை வெளிக்கொண்டு வருவதற்கும் அதனை விமர்சன ரீதியாக ஆய்வு செய்வதற்கும் இந்த கட்டுரை உதவுவதுடன் இந்திய துணைக்கண்டத்தில் சமயம் முக்கியத்துவம் பெறும் தோற்றப்பாடாக இருப்பதன் காரணமாக சமயத்தினூடாக சூழலியல் சார்ந்த கருத்துக்களை எடுத்துரைக்கும்போது அதன் தாக்கம் மக்கள் மத்தியில் அதிகமாக இருக்கும் என்பதன் அடிப்படையில் இந்த ஆய்வு முக்கியத்துவம் பெறுகிறது.

## 3. இலக்கிய மீளாய்வு

சூழல் மெய்யியலின் தன்மை, அதன் நோக்கங்கள், பரப்பு மற்றும் அது ஆராயும் பிரச்சினைகள் என்பவற்றினை அன்ரூ லயிட் மற்றும் ஹோம்ஸ் ரோல்ஸ்டன் தொகுத்த சூழலியல் ஒழுக்கவியல் - ஒரு தொகுப்பு (2003) என்ற படைப்பு நேர்க்காட்சிவாத அடிப்படையில் விளக்குகிறது.

சமணத்தின் மூலநூல்களான ஹெர்மன் ஜெகோபியினால் தொகுக்கப்பட்ட ஆச்சாரங்க சூத்திரம் (1994), K.C.லால்வானியினால் தொகுக்கப்பட்ட பாகவதி சூத்திரம் (1980) என்பன சமணத் தீரத்தங்கரர்களின் நேரடி அனுபவமாக சூழல், மனிதர்கள், விலங்குகள், சடப்பொருட்கள் தொடர்பாக கருத்துக்களை முன்வைக்கின்றன. இம்மூலங்களில் சூழலுக்கு ஆதரவான கருத்துக்கள் அதிகம் பௌதீக அதீத தன்மை கொண்டதாகவும், ஆன்ம விடுதலையினை அடையும் நோக்கினை கொண்டதாகவும், நரகம், பாவம் மற்றும்

தீமைகள் என்பவற்றில் இருந்து விடுபடும் நோக்கினைக் கொண்டதாகவும் காணப்படுகின்றன. இம்மூலங்கள் தீர்த்தங்கரர்களின் நேரடி ஆன்மீக அனுபவத்தினை கொண்டவையாகக் காணப்படுகின்றன.

சமண சமயத்தின் ஒழுக்க ஆசார நூல்களான B.K. கடபாடி என்பவரினால் எழுதப்பட்ட சிராவகசாரம், சமண சமய இல்லறத்தாருக்குரிய ஒழுக்கவிதிகள் (1992) மற்றும் C.R. ஜெயின் என்பவரினால் தொகுக்கப்பட்ட இரத்தினக் கரண்டா சிராவகசாரம் (1975) என்பன சூழலுக்கு ஆதரவான ஒழுக்க விதிகளைப் பேசுகின்றன. இந்த ஒழுக்க விதிகள் தீர்த்தங்கரர்களின் போதனைகளிலிருந்தும் அவர்களது ஒழுக்க நடைமுறைகளிலிருந்தும் பெறப்பட்டவை.

சமண சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களை விளக்குகின்ற டீ.பட்டாச்சாரியாரினால் எமுதப்பட்ட சமண மெய்யியல் (1976) மற்றும் C.ஜெயினால் எழுதப்பட்ட சமண சமயத்தின் அடிப்படைகள் போன்ற நூல்கள் இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சூழலியல் மெய்யியல் பற்றிய நூல்களைத் தவிர ஏனைய அனைத்து நூல்களும் சமண சமயத்தவரால் எழுதப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

சமண சமயத்தில் காணப்படும் சூழலியல் மெய்யியலுக்கு ஆதரவான கருத்துக்கள்-ஒரு நோக்கு என்ற இந்த ஆய்வு சூழல் மெய்யியல் நோக்கில் நேர்க்காட்சி வாதம் மற்றும் மனிதநலவாதம் என்பவற்றின் அடிப்படையில் நவீன சமூக சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## 4. ஆய்வின் மூலங்களும் முறைகளும்

ஆய்வுமூலங்கள் என்ற வகையில் சூழலியல் மெய்யியல் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சமண மெய்யியல் தொடர்பாக எழுதப்பட்ட மூல நூல்கள் (Original Texts) மற்றும் இரண்டாம் தர நூல்கள் (Secondery Sources) மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வு முறை என்றவகையில் மெய்யியலுக்கேயுரிய ஆய்வுமுறையான நம்பிக்கைகள் பற்றிய விமா்சன ரீதியான மதிப்பீட்டு முறை மற்றும் எண்ணக்கருக்களின் தெளிவுபடுத்துகை முறை என்பனவும் பகுப்பாய்வு முறை, தொகுப்பு முறை, ஒப்பீட்டு முறை, விமா்சன மற்றும் முழுமை முறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 5. கருத்துக்களும் பகுப்பாய்வும்

### 5.1. சமணமும் தாவரங்களும்

நாம் வாழும் சுற்றுச் சூழலில் முக்கிய கூறாக விளங்கும் தாவரங்கள் பற்றி பல்வேறுவிதமான புதுமையான கருத்துக்களை சமணம் எடுத்துரைக்கின்றது. தாவரங்கள் என்ற வகையீட்டில் புற்பூண்டுகள் முதல் பெரிய மரங்கள் வரை அடங்குகின்றன. ‘தாவரம்’ என்றால் ‘அசையாதது’ என்று பொருள். தாவரம் என்ற தமிழ் சொல் ‘ஸ்தாவர’ என்ற பிராகிருத சொல்லிலிருந்து வருகின்றது. (ஆச்சாரங்க சூத்திரம் 1.8.1.13)

தாவரங்களுக்கு உயிருண்டு, ஆசையுண்டு கரும பலன்களின் காரணமாக தாவரங்கள் தாவரங்களாக பிறந்துள்ளன என சமணர்கள் நம்புகின்றனர். அவற்றினை மனிதர்களைப் போலவே நோக்க வேண்டும் நடத்த வேண்டும் என சமணர்கள் வற்புறுத்துகின்றனர். தாவரங்களின் பயன்பாடு மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பது விஞ்ஞான ரீதியில் நீருபிக்கப்பட்டுள்ளது. அதனால் அரசம் அரசு சார்பற்ற நிறுவனங்களும் பல்வேறுவிதமான நடவடிக்கைகளை தாவரங்களை பாதுகாக்கும் நோக்கில் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு முன்பு சமணர்கள் தாவரங்கள் தொடர்பாக மிகச் சிறந்த அறிவினை பெற்றிருந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டிக்கு பின்பே விஞ்ஞானிகள் தாவரங்களுக்கு உயிரும் உணர்வும் உண்டு என விஞ்ஞான ரீதியாக நிருபித்தனர். புகழ்பெற்ற இந்திய விஞ்ஞானியான ஜெகதீஸ் சந்திரபோஸ் தாவரங்களின் வளர்ச்சிக்கும் இசைக்குமுள்ள தொடர்பினை ஆராய்ந்தார். ஆச்சாரங்க சூத்திரம் என்ற சமண நூலில் மனிதர்களுக்கும் தாவரங்களுக்கும் இடையில் பின்வரும் ஒப்புமை கையாளப்படுகிறது.

> ‘‘மனித உடல் பிறக்கின்றது இது போலவே தாவரத்தின் உடலும் பிறக்கின்றது. மனித உடல் வளர்கின்றது, தேய்கின்றது மற்றும் உணவை எடுத்துக் கொள்கின்றது. இதுபோலவே தாவரத்திற்கும் நிகழ்கின்றது. போசனை பொருட்களை எடுத்துக் கொள்ளும் போது மனித உடல் உறுதியாகின்றது, எடுத்துக் கொள்ளாத போது பலவீனமடைகின்றது. இதுபோலவே தாவரத்திற்கும் நிகழ்கின்றது. மனித உடல் பல்வேறுவிதமான மாற்றங்களுக்கு உட்படுகின்றது. இது போலவே தாவரத்திற்கும் நிகழ்கின்றது. (ஆச்சாரங்க சூத்திரம் 1.1.5)

மேற்குறிப்பிட்ட உவமை புலக்காட்சியின் அடிப்படையில் இடம்பெறுவதுடன் தாவரத்திற்கும் மனிதனுக்குமிடையில் ஒருங்கிசைவான தன்மைகளை எடுத்து விளக்குகிறது. இதன் மூலம் மனிதன் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமோ அவ்வாறே தாவரங்களும் நோக்கப்படவும் நடத்தப்படவும் வேண்டும் என சமணம் வாதிடுகின்றது. சமணக் கொள்கையின் படி ஆன்மிகத்தின் மிகவும் உயர்நத நிலையான ஞானத்தை பெறுவதற்கு தடையாக உயிர்களுக்கு எதிரான வன்முறையே காணப்படுகிறது. எந்த ஆன்மா வன்முறையிலிருந்து விடுபட்டு காணப்படுகிறதோ அந்த ஆன்ாவிற்கே வீடுபேறு கிடைக்குமென சமணர்கள் நம்புகினற்னர். வன்முறையில் ஈடுபடுவதிலிருந்து விடுபடுவதே மிக முக்கியமான ஆன்ம ஈடேற்றமாக சமணம் கருதுகின்றது. ஒருவர் வன்முறையில் ஈடுபடவில்லையாயின் அவரிடம் எல்லா நற்குணங்களும் நிறைந்து காணப்படும் என சமணர்கள் நம்புகின்றனர். தாவரங்களில் ஆத்மாக்கள் அல்லது ஒரு சில தாவரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆத்மாக்கள் இருப்பதாக சமணர்கள் நம்புகின்றனர். ஆகவே இவற்றுக்கு

துன்பம் விளைவிக்காமல் இருப்பது அவசியமானது என சமணர்கள் வற்புறுத்துகின்றனர். தாவரங்களுக்கு உயிருண்டு என்றும் தாவரங்களை கொல்வது பாவமான செயல் என்பதையும் உலகுக்கு அறிவித்த முதல் மனிதர்களாக சமணர்கள் காணப்படுகின்றனர்.

> “இந்த தாவரங்களை துன்பத்துக்குள்ளாக்குபவர்கள் பாவச் செயல்களை சரியாக புரிந்து கொண்டு விடுபடவில்லை: தாவரத்திற்கு துன்பத்தினை விளைவிக்காதவர்கள் பாவச் செயல்கள் புரிந்து கொண்டு விடுபடுகின்றனர். இவற்றை அறிந்து அறிவுள்ளவர் தாவரங்களுக்கு துன்பங்களை விளைவிப்பதில்லை, ஏனையவர்கள் அத்தகைய தவறுகள் செய்வதற்கு காரணமாக இருப்பதுமில்லை, ஏனையவர்களை இத்தகைய தவறுகள் செய்ய அனுமதிப்பதுமில்லை. தாவரங்களுடன் தொடர்புபட்ட பாவங்களை அறிபவர்கள் தனது செயலுக்குறிய பலனை அறியும் முனிவனாகின்றான் (ஆச்சாரங்க சூத்திரம் 1.1.5.7).

முளைவிட்ட தானியங்களும், வேர் காய் கறிகள், சில வகைள் செடிகள் கொடிகள் ஒன்றுக்கு மேற்பட்ட ஆத்மாக்களை கொண்டிருப்பதாக சமணர்கள் நம்புவதன் காரணமாக (இந்த நம்பிக்கையினை தவறு என நிருபிக்க முடியாது) இத்தகைய தாவரங்களை துன்பப்படுத்துவது மிகவும் பாவமான காரியமாக கருதப்படுகிறது. சமண சமயத்தை பொறுத்த வரையில் துறவிகள் நூற்றுக்கு நூறு வீதம் அஹிம்சையினை கடைப்பிடிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை இல்லறத்தார் துறவிகள் அளவிற்கு இல்லாவிட்டாலும் ஓரளவிற்கு அஹிம்சையினை கடைபிடிக்க வேண்டும் என கூறப்படுகின்றது. இவ்வகையில் தாவரங்களின் பாதுகாப்பு சமணத்தில் உறுதி செய்யப்படுகிறது. நாம் கொண்டிருக்கும் சாதாரண புலனறிவிற்கு இவர்களது விளக்கங்கள் முட்டாள்தனமானதாக தோன்றலாம். ஆனால் இந்த விளக்கங்கள் பூரண ஞானம் நிறைந்த தீர்த்தங்கரர்களினால் உரைக்கப்பட்டிருப்பதன் அடிப்படையில் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிருக்கிறது.

தற்காலத்தில் மரங்கள் பெருமளவிற்கு மனிதனின் பேராசைக்கு பலியாகி வருகின்றன. அலங்காரமான விலை உயர்ந்த மர தளபாடங்கள் அதிக பணத்திற்கு வாங்கப்படுகின்றன மற்றும் விற்கப்படுகின்றன. இதன் காரணமாக காடுகள் மிக வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் காடுகளை மீள் உருவாக்கம் செய்யும் செயல்திட்டமானது ஆமை வேகத்தில் நடைபெற்று வருகின்றது. மனிதர்களின் மனத்திலிருந்தும் அவனது உடலிருந்தும் வன்முறை தொடர்பான சிந்தனைகளும் வார்த்தைகளும் புறப்பட்டு வருகின்றன. மரங்கள் தொடர்பான இத்தகைய வார்த்தைகளை பயன்படுத்தக்கூடாது என

சமணர்கள் வற்புறுத்துகின்றனர். வார்த்தைகளில் அஹிம்சை மரங்களை நோக்கி இருக்க வேண்டும் என ஆச்சாரங்க சூத்திரம் குறிப்பிடுகின்றது

> “ஆண் துறவிகளே மற்றும் பெண் துறவிகளே பூங்காக்களிலும் மலைகளிலும் மரங்களை நீங்கள் காணும் போது மாளிகைகளுக்கும் வீடுகளுக்கும் இது போன்ற பல தேவைகளுக்கும் பொருத்தமானதாக உள்ளன என்று பேசக்கூடாது. அவை பற்றி நீங்கள் பின்வருமாறு பேச வேண்டும் இந்த மரங்கள் புனிதமானதாகவும் உயரமானதாகவும் மட்டமானதாகவும் பெரியதாகவும் இருக்கின்றன. இந்த மரங்கள் பரந்துபட்ட கிளைகளையுடையதாக இருக்கின்றது. இவை அற்புதமானதாக உள்ளன என இவற்றை விபரிக்க பாவமற்ற சொற்களை பயன்படுத்துங்கள்”. (ஆச்சாரங்க சூத்திரம் 11.4.2.11-12)

இவ்வாறாக மரங்களையும் கொடி செடிகளையும் காணும் போது அழகியல் உணர்வுடன் பார்க்க வேண்டுமே தவிர ஆசையுடன் அதனை எமது சுயநல நோக்கிற்காக பயன்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் பார்க்கக்கூடாது, அந்த நோக்கினை வெளிப்படுத்தும் வார்த்தைகளை பேசக்கூடாது, அந்த நோக்கினை வெளிப்படுத்தும் செயல்களில் ஈடுபடக்கூடாது என சமண மதம் வற்புறுத்துகின்றது.

மலர்களும் சில வகை காய்கறிச் செடிகளும் தம்முள் நிறைய உயிர்களைக் கொண்டிருப்பதாக சமணர்கள் நம்புகின்றனர். இத்தகைய நம்பிக்கையானது சரியோ தவறோ ஆனால் சுற்றுச்சூழலின் பாதுகாப்பிற்கு பெரிதும் துணைபுரிய வல்லது என்பதை நாம் மறுக்க முடியாது. எடுத்துக்காட்டாக மஹா வீரருக்கும் அவரது சீடருக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடலின் ஒரு பகுதியினை காண்போம்.

> “பகவானே உருளைக்கிழங்கு, இஞ்சிக்கிழங்கு போன்ற கிழங்குகள் வரையற்ற உயிர்களைக் கொண்டிருக்கின்றனவா?, இவை வேறுபட்ட வடிவங்களை கொண்டிருக்கின்றனவா? ஆம் கௌதமா இவை எண்ணிக்கையற்ற உயிர்களைக் கொண்டிருப்பதுடன் வேறுபட்ட வடிவங்களையும் கொண்டுள்ளன” (பாகவதி சூத்திரம் பாகம் - 3, புத்தகம் - 7, அத்தியாயம் - 3. கேள்வி மற்றும் பதில் 54).

### 5.2. சமண மதமும் விலங்குகளும்

இயற்கை சூழலில் மற்றுமோர் முக்கிய கூறாக காணப்படுவது விலங்குகள். விலங்குகள் பற்றிய நோக்கு மிகவும் விரிவானதாகவும் ஆழமானதாகவும் சமணத்தில் இடம்பெற்றுள்ளது. வேத யாகங்களில் விலங்குகள் பலியிடப்பட்ட போது அவற்றை எதிர்த்து நின்றவர்களில் சமணர்களும் அடங்குவர். உயிரினங்களை வதைக்கும் கிரியைகள் அல்லது சடங்குகள் என்பவற்றை சமணர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. விலங்குகளுக்கு துன்பம் விளைவிக்கக்கூடாது என்பதில் சமணர்கள் மிகவும் உறுதியாகவுள்ளனர். விலங்குகளை நாம் பார்க்கும் போது எமது பல்வேறுபட்ட சுயநல நோக்குகள் (அவற்றை உண்ணுதல்) போன்ற நோக்குகளின் அடிப்படையில் பார்ப்பதும் அதனை விபரிப்பதும் தவிர்க்கப்பட வேண்டியது என்றும் பாவம் என்றும் சமணம் அறிவுறுத்துகின்றது.

> “ஆண் துறவிகளே பெண் துறவிகளே பசுக்களையோ அல்லது எருதுகளையோ நீங்கள் பார்க்கும் போது இந்த பசுக்களிலிருந்து நிறைய பால் கறக்கப்படல் வேண்டும், இந்த பசுக்கள் அடைக்கப்படல் வேண்டும், இந்த எருதுகள் வண்டி இழுக்க வேண்டும் போன்ற பாவமான சொற்களை பேசக்கூடாது. பசுக்களையும் எருதுகளையும் நீங்கள் பார்க்கும் போது பின்வருமாறு பேச வேண்டும், இது மிகவும் இளைய பசு, பால் கொடுக்கும் பசு, இது அதிக பாலை கொடுக்கிறது, இது பெரியது அல்லது சிறியது, இந்த எருது பாவம் சுமை தூக்குகிறது போன்ற பாவமற்ற சொற்களை பயன்படுத்த வேண்டும் (ஆச்சாரங்க சூத்திரம் 11.4.2.9-10)

தாவரங்களை நாம் எவ்வாறு நோக்குகின்றமோ அவ்வாறே விலங்குகளை நோக்க வேண்டும் என சமண தத்துவம் கூறுகின்றது. துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதல் என்ற செயற்பாடு சமண தத்துவத்தில் அதிக முக்கியத்துவம் பெறுகின்ற விடயமான இருக்கின்றது. எந்தளவிற்கு துன்பத்தினை தாங்கி அனுபவிக்கின்றோமோ அந்தளவிற்கு எமது தீய கருமங்களின் பலன்கள் குறைவடையும் என சமணர்கள் நம்புகின்றனர், இதன் காரணமாக அவர்கள் தமக்கு வரும் துன்பங்களை தாங்கிக் கொண்டு அவற்றிற்கு எதிர்வினை புரியாமல் இருக்க முற்படுகின்றனர். இத்தகைய ஒருநிலை தீவிரமாக சமண துறவிகளாலும் ஓரளவிற்கு சமண சமய இல்லறத்தாராலும் பின்பற்றப்பட்டு வருகின்றது. இன்னா செய்தாரை ஒருத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல் என்ற கொள்கையினை மனிதன் முதல் உயிரினங்கள் வரை பின்பற்றும் தத்துவமாக சமண தத்துவம் காணப்படுகின்றது. வன்முறைக்கு எதிராக வன்முறையினை பிரயோகிக்கக்கூடாது என்ற சீலம் மிகவும் பின்பற்றப்படும் தத்துவமாக சமணம் விளங்கி வருகின்றது. சமணத்துறவிகள் காட்டு விலங்குகள் தாக்கினாலும் அவற்றினை

திரும்பத்தாக்கக் கூடாது என்றும் அதை மகிழ்ச்சியுடன் தாங்கிக் கொள்ள வேண்டும் என்றும் சமண தத்துவம் அறிவுறுத்துகின்றது.

> “தம்மைத் தாக்கும் விலங்குகளை தாக்குபவர் முழுமையாக பாவத்தை புரிந்து கொண்டவரோ அல்லது பாவத்திலிருந்து விடுபட்டவரோ அல்ல: தம்மை தாக்கும் விலங்குகளை தாக்காதவர் பாவங்களை புரிந்து கொண்டவரும் விடுபட்டவரும் ஆவார் (ஆச்சாரங்க சூத்திரம் 1.1.6.6)

### 5.3 உயிர்களும் நான்கு பூதங்களும்

சமணர்களின் உயிர்கள் பற்றிய வகையீடு புதுமையானதாகவும் ஏனைய தத்துவ முறைமைகளிலிருந்து வேறுபட்டதாகவும் காணப்படுகிறது. இவர்கள் உயிர்களை இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கின்றனர்.

1) ஸ்தாவர உயிர்கள்(அசையாத உயிர்கள்)

2) சங்கம உயிர்கள் (நடமாடும் உயிர்கள்)

ஸ்தாவர உயிர்களுக்குள் நான்கு பூதங்கள் (நீர், நிலம், காற்று மற்றும் நெருப்பு) மற்றும் மரங்கள் கொடி செடிகள் உள்ளடக்கப்படுகின்றன. இத்தகைய உயிர்கள் ஒரு உணர்வினை மாத்திரம் அதாவது தொடு உணர்வினை மாத்திரம் கொண்டிருப்பதாக சமணர்கள் கருதுகின்றனர். பின்வருவன ஸ்தாவர உயிர் வகைக்குள் அடங்குகின்றன.

1. பூமி சார்ந்த உயிர்கள் (இரத்தினக்கல், உப்பு, மண், பாதரசம்)
2. நீர் சார்ந்த உயிர்கள் (பனி, நீர், ஈரலிப்பு, மழை)
3. நெருப்பு சார்ந்த உயிர்கள் (நெருப்பு, நெருப்புச் சுவாலை, மின்னல்)
4. காற்று சார்ந்த உயிர்கள் (வீசும் காற்று)

காய்கறி சார்ந்த உயிர்கள் இரண்டு வகையாக பிரிக்கப்படுகின்றன

அ) ஒன்றுக்கு மேற்பட்ட உயிர்களைக் கொண்ட காய்கறிகள்

இந்த வகையீட்டில் முளைவிட்ட தானியங்கள், வேர் கிழங்கு வகைகள், கீரை வகைகள் உள்ளடங்குகின்றன.

ஆ) ஒரு உயிரினை மட்டும் கொண்டவை

இந்த வகையீட்டில், பழங்கள், தானியங்கள், இலைகள், மலர்கள் என்பன உள்ளடங்குகின்றன.

மேலும் இந்த ஐந்து வகை ஸ்தாவர உயிர்கள் இரண்டு வகையாக பிரிக்கப்படுகின்றன

i சூக்கும உயிர்கள்

ii ஸ்தூல உயிர்கள்

சூக்கும உயிர்கள் இப்பிரபஞ்சம் முழுவதும் பரந்து காணப்படுவதுடன் ஐம்புலன்களுக்கு புலனாகாமல் இருக்கின்றன. அதேவேளை ஸ்தூல உயிர்கள் ஐம்புலனுக்கு

உட்படுபவையாக இருப்பதுடன் பிரபஞ்சத்தின் ஒரு பகுதியிலேயே காணப்படுகின்றன.

நடமாடும் உயிர்கள் பற்றிய சமணர்களின் வகையீடு பின்வருமாறு காணப்படுகிறது.

நடமாடும் உயிர்கள் தொடு உணர்விற்கு மேலதிகமான புலன் உணர்வுகளைக் கொண்டுள்ளன

1. இரண்டு புலன் உணர்வுகளைக் கொண்ட உயிர்கள் (தொடு உணர்வு மற்றும் சுவை உணர்வு கொண்டவை) இந்த வகையீட்டில் புழுக்கள் மற்றும் சிப்பி என்பன உள்ளடங்குகின்றன.

2. மூன்று புலன் உணர்வுகளைக் கொண்ட உயிர்கள் (தொடு உணர்வு, சுவை உணர்வு மற்றும் மண உணர்வு) இந்த வகையீட்டில் எறும்புகள், பேன்கள், நத்தைகள் என்பன உள்ளடங்குகின்றன.

3. நான்கு புலன் உணர்வுகளைக் கொண்ட உயிரினங்கள் (தொடு உணர்வு, சுவை உணர்வு, மண உணர்வு மற்றும் பார்வை உணர்வு) இந்த வகையீட்டில் தேனிக்கள், வண்ணத்துப்பூச்சுக்கள், சிலந்திகள், தேள்கள் மற்றும் ஏனைய பூச்சி வகைகள் உள்ளடங்குகின்றன.

4. ஐந்து புலன் உணர்வுகளையுடைய உயிர்கள் தொடு உணர்வு, சுவை உணர்வு, மண உணர்வு, பார்வை உணர்வு மற்றும் கேட்டல் உணர்வு) இந்த வகையீட்டில் ஊர்வன, பறவைகள், மீன்கள் மற்றும் எல்லாவிதமான பாலூட்டிகள். (போல் டுன்டாஸ், 1992, பக்.95)

புலன் உணர்வினை அடிப்படையாகக் கொண்ட சமணர்களின் வகையீடு சுற்றுப்புறச்சூழலின் பாதுகாப்பிற்கு பெரிதும் துணைபுரிய வல்லது. அசையாதவை முதல் அசைவன வரை எல்லாவற்றிற்கும் உயிர் இருப்பதாக சமணர்கள் கருதுவதன் காரணமாக இவற்றின் அழிவுத்தன்மை மற்றும் மாசடைதல் குறைக்கப்படலாம். இதேபோல் காட்டு விலங்குகளும் வீட்டு விலங்குகளும் நியாயமாக நடத்தப்படக்கூடிய நிலையினை சமண தத்துவம் உருவாக்குவாக்குகின்றது.

சுற்றுப்புறச் சூழலின் மிக முக்கியமான பகுதிகளாக தாவரங்கள், விலங்குகள், ஏனைய உயிரற்ற பொருட்கள் சமண தத்துவத்தில் அஹிம்சை எனும் சகதிவாய்ந்த கொள்கையினால் பாதுகாக்கப்படுகின்றது. சமணர்களின் கரும கோட்பாடும் சுற்றுச் சூழலின் பாதுகாப்பிற்கு பெரிதும் துணைபுரிகின்றது. அசையும் உயிர்கள் அசையாத உயிர்களாகவும் அசையாத உயிர்கள் அசையும் உயிர்களாகவும் கருமத்தின் காரணமாக பிறவிகளை எடுக்கின்றன. அத்துடன் நாம் பொதுவாக உயிரற்ற சடப்பொருளாக கருதுகின்றவற்றை சமணர்கள் உயிருள்ள பொருட்களாக கருதுவதன் காரணமாக சூழலின் எல்லாவிதமான கூறுகளும் நன்கு பாதுகாக்கப்படக்கூடிய சூழ்நிலையினை சமண தத்துவம் உருவாக்கியுள்ளது.

“அசையாத உயிர்கள் (தாவரங்கள், மரங்கள், புற்கள், இன்னும் பல) நடமாடும் உயிர்களாக (மனிதர்கள், விலங்குகள், பூச்சிகள், இன்னும் பல) மாறுகின்றன. நடமாடும் உயிர்கள் அசையாத உயிர்களாக மாறுகின்றன. இவ்வாறு ஸ்தாவர உயிர்களும் நடமாடும் உயிர்களும் தத்தமது செயல்கள் காரணமாக பாவம் செய்பவையாக மாறுகின்றன (ஆச்சாரங்க சூத்திரம் 1.8.1.13)

சமணம் குறிப்பிடும் துறவறத்திற்கும் இல்லறத்திற்கும் உரிய ஒழுக்க விதிகளை நோக்குவோமாயின் அவை அனைத்தும் சூழலை பாதுகாக்க அல்லது சூழலுக்கு குறைந்தளவு தீங்கு விளைவிக்கும் விதிகளாக இருப்பதனை நாம் காண முடியும். சமண தத்துவத்தின் எல்லா ஒழுக்க விதிகளையும் இரண்டு சீலங்களுக்குள் அடக்க முடியும். ஒன்று அஹிம்சை மற்றொன்று ஆசையை துறத்தல் மேற்குறிப்பிட்ட இரண்டு சீலங்களுமே சுற்றுச் சூழலை பாதுகாப்பதற்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது.
பஞ்ச மகா விரதங்களை தவிரத்து பல விதமான ஒழுக்க சீலங்களை சமணத்துறவிகள் மேற்கொள்கின்றனர். அவை பின்வருமாறு

**அ) மூன்று வகை பாதுகாவல்கள்**

1. மனத்தை தூய சிந்தனையில் வைத்துக் கொள்ளுதல் மற்றும் பிற உயிர்களுக்கு துன்பம் செய்யும் சிந்தனைகளைத் தவிர்த்தல்

2. பிற உயிர்களுக்கு தீங்கு செய்யக்கூடாது என்ற நோக்கில் குறைந்தளவு பேசுதல் மற்றும் அதிகம் மௌனத்தைக் கடைப்பிடித்தல்

3. உடலினால் பிற உயிர்களுக்கு தீங்கு செய்வதனை தவிர்த்தல்

**ஆ. ஐந்து வகை கவனங்கள்**

இதேபோல் ஐந்து வகை கவனங்களும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பில் முக்கியமானவை. இந்த ஐந்து வகை கவனங்களும் பிற உயிர்களுக்கு ஆபத்து வரக்கூடாது என உருவாக்கப்பட்டுள்ளது.

i. கவனமாக நடத்தல்

ii. கவனமாக பேசுதல்

iii. கவனமாக சாப்பிடுதல்

iv. பொருட்களை கவனமாக எடுத்தலும் வைத்தலும்

v. மலசலம் கழிக்கும் போது ஏனைய உயிர்கள் பாதிக்கப்படாமல் இருத்தல்

இதேபோல் இல்லறத்தாருக்கு உரிய அதிகமான ஒழுக்க விதிகள் சுற்றுப்புற சூழல்பாதுகாப்புடன் தொடர்புபட்டுள்ளதனை நாம் காண முடிகின்றது.

I. அவசியமற்ற தூரப்பயணம் செல்வதை தவிர்த்தல் (இதன் மூலம் மற்ற உயிர்கள் பாதிக்கப்படலாம்)

II. ஏனைய உயிர்களுக்கு ஆபத்து விளைவிக்கும் தொழில்கள், வர்த்தகம் தவிர்க்கப்படல்

III. அதிகளவு நேரம் சாப்பிடாமல் விரதம் இருத்தல் (உணவு சாப்பிடுகின்ற அளவு குறைவதன் காரணமாக தேவையற்ற பொருள் உற்பத்தி தவிர்க்கப்படலாம்)

IV. அத்தியவசிய மற்றும் ஆடம்பர பொருட்களின் நுகர்வினை குறைத்துக் கொள்ளுதல் (பொருட்கள் உற்பத்தி குறைவதனால் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகரிக்கும்) (எஸ். என். தாஸ்குப்தா,. 1997இ பக்.200-201)

இவை தவிர இல்லறத்தாருக்கு உரிய பல விதிகள் அவர்களது ஆசைகளை கட்டுப்படுத்துவதற்கும் குறைப்பதற்கும் அதிக ஆன்மீக வாதிகளாக மாற்றுவதற்கும் உதவுகின்றது. சமணம் குறைந்தளவு உணவை உண்ணுதல், உணவு உண்ணாமல் விரதம் இருத்தல் மற்றும் அதிக இயற்கை வளங்களை பயன்படுத்தாமல் இருத்தல் தொடர்பான விதிகளை அறிவுறுத்தி வருகின்றது. இத்தகைய ஒருநிலை சூழலை பாதுகாப்பதில் சிறந்த உபாயங்களாக கருதப்படக்கூடியது. மேலும் தன்னை வருத்திக் கொள்ளுதலும் துன்பத்தினை தாங்குதலும் சமண சமயத்தின் முக்கிய பண்பாக காணப்படுவதால் இத்தகைய உளவியல் ரீதியான பண்பு சுற்றுச் சூழலின் எல்லாக்கூறுகளையும் பாதுகாக்கும் அடிப்படை மனப்பாங்கனை உருவாக்க உதவுகிறது.

## 6. முடிவுரை

இவ்வகையில் சமணம் கூறும் துறவிகளுக்குரிய ஒழுக்க விதிகள் மற்றும் இல்லறத்தாருக்குரிய ஒழுக்க விதிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது என்று கூறுவது மிகையாகாது. இந்திய விடுதலையின் தந்தையான மகாத்மா காந்தி அவர்கள் சமணத்திலிருந்து ‘அஹிம்சை’ எனும் ஆயுதத்தை பயன்படுத்தி ஆங்கிலேயேரை வெளியேற்றினார். சமணம் கூறும் தீவிர அஹிம்சை தற்காலச் சூழலுக்கு அதிகம் பொறுத்தமற்றதாகவும் முட்டாள்தனமாகவும் தோன்றலாம், ஆனால் நாம் எந்தளவு தூரத்திற்கு அஹிம்சையினை பின்பற்றுகிறோமோ அந்தளவு தூரம் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும் என்பதை மறுக்க முடியாது. முழுமையாக இல்லாவிட்டலும் ஓரளவிற்கேனும் அஹிம்சையினையும் பற்றின்மையினையும் நாம் சமணத்திலிருந்து கற்றுக் கொள்வோமேயானால் அது சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கு ஓரளவிற்காவது உதவும் என நம்பலாம். விஞ்ஞானம் இவ்வுலகினையும் இவ்வுலகப் பொருட்களையும் போகப் பொருளாக நுகரச் செய்யும் மனப்பான்மையினை வளரச் செய்து வருகின்றது. இத்தகைய ஒரு சூழ்நிலை சுற்றுப்புறச் சூழலின் பேரழிவிற்கு வழிவகுக்கும், இது கண்களை விற்று சித்திரம்

வாங்குவதற்கு சமமானதாகும். இத்தகைய பிற்புலத்தில் சமணர்களின் சூழல் பற்றிய சிந்தனைகள் மீது நமது கவனத்தை செலுத்துவது அதிக சனத்தொகைக் கொண்ட தெற்காசியாவை பொறுத்த வரையில் பேண்தகு அபிவிருத்தி (Sustainable Development) தொடர்பில் இன்றியமையாத அம்சமாகும்.

**உசாத்துணை நூல்கள்**


1. Bhattacharya, B. (1976) Jain Philsophy, New Delhi:Munshiram Manoharlal
2. Dasgupta, S. N (1997) A History of Indian Philosophy, Vol.1, Delhi: Motilalbanarsi dass.
3. Dundas, Paul (1992) The Jains, London and New York: Taylor& Francis group
4. Honderich, Ted (ed.) (1995) The Oxford Companion to Philsophy, New York: Oxford University Press.
5. Jacobi, Herman (2006) The Golden Book of Jainism, Humanity's Oldest Religion of Non-violence, New Delhi: Lotus Press.
6. Jacobi, Herman(tr.) (1994) Jaina Sutras par-I, The Akaranga Sutraand The Kalpa Sutra in the Sacred Book of the East – Vol. 22 edited by F.Max Muller, New Delhi: Motilal Banarsidass Publishers Pvt.Ltd.
7. Jain, C (1974) Fundamentals of Jainism, Meerut: Veer Nirvan Bharti.
8. Jain, C.R (1975) Ratna- karanda Sravakacara of Sri Samanta Bhadra Acarya translated by Champt Jain , Veer Nirvan Bharti, Meerut.
9. Jain, D. (1992) Basic Tenents of Jainism, New Delhi: Vir Sewa Mandir.
10. Johnson.W. (1995) Harmless Souls , Delhi: Motilal Banarsidass.
11. Khadabadi, B. K. (1992) Sravakacara, Jaina code of Conduct for House holders, NewDelhi: Shri Rajakrishna Jain Charitable Trust.
12. Lalwani, K.C (ed.) (1980) Bhagavati Sutra, Vol III, Jain Bhawan, Calcutta.
13. Light, Andrew and Rolston, Holmes (ed.)2003 Environmental Ethics – An Anthology, USA, Blackwell Publishers
14. Shah, Natubhai (2004) Jainism, The World of conquerors, Vol I & II, Delhi: Motilal Banarsidass Publishers Pvt. Ltd.